# சீவக சிந்தாமணியில் சமண சமய அடிப்படைக் கொள்கைகள்

**ஜா. ப. இலக்கியா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தாமரைப்பாடி

**மலர்:** 3
**சிறப்பிதழ்:** 4
**மாதம்:** மார்ச்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

உலகத்தில் மக்கள் பின்பற்றி ஒழுகும் சமயங்கள் பல. இந்து, பௌத்த, சமண, கிறிஸ்தவ, இஸ்லாமிய, யூத, சீக்கிய, சொராத்திய, கான்பூசிய, தாவோ, ஷிந்தோ முதலிய சமயங்கள் பல உள்ளன. இச்சமயங்கள் ஒவ்வொன்றும் மக்களின் வாழ்க்கையையும், நடத்தையையும் செம்மைப்படுத்தி நேர்மையான வழியில் உயர்ந்த நெறிமுறைகளோடு வாழ்ந்திட வழிகாட்டுகின்றன.

மக்களையும், சமுதாயத்தையும் நல்வழியில் நடத்தக்கூடிய வல்லமை சமயங்களுக்கே உண்டு. இச்சமயங்கள் எல்லாம் மனித சக்திக்கு மேம்பட்ட சக்தி ஒன்று இருப்பதை உணர்த்தி, அச்சக்தியைப் பல்வேறு முறைகளால் தொழுதும், வணங்கியும் போற்றியும் வருகின்றன.

இச்சிறப்புப் பொருந்திய சமயங்களின் மிகத்தொன்மையான சமயம் சமண சமயமாகும். இச்சமயம் சந்திர குப்த மௌரிய மன்னன் காலத்தில் வட இந்தியாவில் தோன்றியது. தோன்றிய காலம் தொட்டு இச்சமயம் பல அடிப்படைக் கொள்கைகளை பின்பற்றி வருகின்ளது. அவை சமண சமயத் தத்துவங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இதன் முக்கியத்துவத்தை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

## சமண சமய அடிப்படைத் தத்துவக் கொள்கைகள்

சமண சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் மூன்று வகைப்படும். அவை,

- நற்காட்சி
- நல்ஞானம்
- நல்லொழுக்கம்

முதலியன ஆகும். இந்த மூன்று அடிப்படைத் தத்துவங்களும், இவைப் பற்றி அறிகின்ற அறிவும் ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியம். இவற்றை அறிந்தவர்கள் இறைவனைச் சென்று சேரும் தகுதி உடையவர்கள்.
இந்த மூன்று அடிப்டைத் தத்துவங்களின் அவசியத்தையும், அதனால் ஏற்படும் பயனையும் இரு வினைகளை அகற்றும் தன்மை உடையது என்பதை ஒரு மனிதனுக்கு அவற்றின் பயன் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் சீவகன் வழிப் போக்கனுக்கு எடுத்தியம்புகின்றான்.

**"மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய பொருள்கள் தம்மைப்**
**பொய்வகை இன்றித் தேறல் காட்சி ஐம்பொறியும் வாட்டி**
**உய்வகை உயிரைத் தேயாது ஒழுகல் ஒழுக்க மூன்றும்**
**இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்"**

**(சீவக:கேமசரி.இ:1436)**

ஞானம் என்பது உண்மையை, அஃதாவது மெய்ப்பொருளை அறிவதாகும். அவ்வாறு அறிந்த மெய்ப்பொருள்களை பொய்யின்றி உண்மையைத் தேர்ந்து

தெளிந்து நம்பிக்கை கொள்வதே காட்சியாகும். ஐம்பொறிகளையும் ஐம்புலன்களில் செல்லாமல் தடுத்து, நடப்பது ஒழுக்கமாகும். ஆக இந்த ஞானம், காட்சி, ஒழுக்கம் என்று கூறிய மூன்று குணங்களும் ஒருவனிடத்தில் நிறைந்து தங்கும் போதே அவன் செய்த இருவினைகளும் கெடும் என்று சீவகன் கூறினான்.

இவ்வாறாகச் சமண சமயம் கூறும் மூன்று அடிப்படைத் தத்துவங்களும் பிறவித் துன்பத்திலிருந்து மனிதனைக் காத்து நிற்கும் மருந்தாக உள்ளன. இந்த மும்மணிகளை நன்கு தெளிந்தவர்கள் இன்ப வாழ்க்கையையே எய்துவார்கள். அவர்களுக்கு மீண்டும் பிறவி என்ற துன்பம் ஏற்படாது இறைவனை நேரே சென்று சேர்ப்பவர்கள் ஆவர்.

**நற்காட்சி**

'சம்யக் தரிசனம்' என்பதன் தமிழாக்கத் தொடர் நற்காட்சி என்பதாகும். நற்காட்சி என்பது ஆறு திரவியங்கள், ஒன்பது பதார்த்தங்கள் இவற்றைப் பற்றிப் பரிபூரணமாக அறிவது. ஆறு திரவியங்களாகச் சொல்லப்படுபவை.

- உயிர் அதாவது ஆன்மா.
- உயிர் இல்லாதவை - புத்கலம் - ஆன்மா இல்லாத சடம் அனைத்தும்.
- தர்மம் - புத்கலமும் ஆன்மாவும் இயங்க அணுகுமாய் இருப்பது.
- அதர்மம் - அசையா நிலை
- ஆகாயம் - இடைவெளி
- காலம் - திரவியங்களின் மாற்றங்களுக்குக் காரணமாய் இருக்கும் ஓர் அளவை.

ஒன்பது பதார்த்தங்களாகக் குறிப்பிடப்படுபவை

- ஜீவன் - உயிர் உள்ளது - ஆன்மா
- ஆஜீவன் - உயிர் இல்லாதது - சடப் பொருள்
- புண்ணியம் - நல்வினை
- பாவம் - தீவினை
- ஆஸ்ரவம் - ஊற்று
- பந்தம் - கட்டு
- சம்பரை - செறிப்பு
- நிர்ஜரை - உதிர்ப்பு
- மோட்சம் - வீடு

குதர்க்கவாதம் செய்யாமலும், அசம்பாவிதமான சந்தேகங்களுக்கு இடம் கொடாமலும், மூன்று மூட நம்பிக்கைகளுக்கு இடம் கொடாமலும் இருப்பதே நற்காட்சி ஆகும். தேவ மூடம், உலக மூடம், பாசண்டி மூடம் என மூடங்கள் மூன்று வகைப்படும்.

- **தேவ மூடம்** - தெய்வம் நம்மை வாழ்விக்கும் (அ) வீழ்த்திவிடும் என ஆர்வமுற்றும் அச்சமுற்றும் வாழ்வது ஆகும்.
- **உலக மூடம்** - கங்கை, காவேரி போன்ற நதிகளில் நீராடினால் பாவம் அகன்றுவிடும் என்று நம்புவது.
- **பாசண்டி மூடம்** - போலித் துறவிகளையும், அவர்களின் போதனைகளையும் நம்புவது, மதிப்பது முதலியன ஆகும்.

மற்ற இரண்டு மணிகளைக் காட்டிலும் நற்காட்சி என்பதே மிக முக்கியமானது என்று சமணர்கள் கருதுகின்றனர். ஏனென்றால், மெய்ப்பொருளைத் தெளிந்தாலன்றி, நல்ஞானத்தையும், நல்லொழுக்கத்தையும் அறிவியலாது. எனவே, நற்காட்சியே இவ்விரண்டிற்கும் இன்றியமையாதது ஆகும் என்று சமணர்கள் கூறுகின்றனர்.

> **"மன்றல் நாறுமணி முடிவேல் மலிந்த சூளா மணிபோலும்**
> **வேன்றோர் பெருமான் அறவாழி வேந்தன் விரிபூந்தாமரை மேல்**
> **சென்ற திருவார் அடியேத்தித் தெளியும் பொருள்கள் ஓரைந்தும்**
> **அன்றி ஆறும் ஒன்பானும் ஆகும் என்பார் அறவோரே"**
>
> **(சீவக.முக்தி.இ.2814)**

நறுமணம் கமழும் அழகிய முடிவேல் திகழும் சூளாமணி போன்ற வினைகளை வென்ற அறபோர் தலைவனும், அறக்கடலாக விளங்கும் இறைவனும் ஆகிய அருகப் பெருமாளின் மலர்ந்த தாமரை மலர் மேல் நடந்த திருவடிகளைத் துதித்து வணங்கித் தெளிகின்ற பொருள்கள் ஒழுக்க நெறிகள் ஐந்தும் (சீவன், புத்கலம், தருமம், அதருமம், ஆகாயம்) அவற்றோடு காலமும் சேர ஆறும், அறநெறி மார்க்கங்கள் ஒன்பதும் (உயிர், உயிரல்லது, புண்ணியம், பாவம், ஊற்று செறிப்பு, கட்டு, உதிர்ப்பு, வீடு) ஆகும் என்று அறவோர்கள் கூறுவர். இவ்வாறு, நற்காட்சியாகிய ஒழுக்கநெறிகள் ஐந்தும், இவற்றுடன் காலமாகிய ஆறும், ஒன்பது அறநெறி மார்க்கங்களையும் நன்கு அறிந்து தெளிந்தவர்களே நற்காட்சியின் பயனை அடையக் கூடியவர்கள் ஆவார்கள்.

**நல்ஞானம்**

'சமயக் ஞானம்' என்பதன் தமிழாக்கத் தொடர் நல்ஞானம் (அ) நல்லறிவு என்பதாகும். நற்காச்சியினின்று விளைவது நல்ஞானம், நற்காட்சி ஏற்பட்ட பின்னர் நல்ஞானத்தைப் பெற முயல வேண்டும். நற்காட்சியும் நல்ஞானமும் சொல்லும் பொருளும் போல, விளங்கும் ஒளியும் போல, ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புள்ளவையாகும். நற்காட்சியின் வழிவரும் மெய்யியல், கருத்தியல், அறவியல் கருத்துக்களை பின்பற்றத்தக்கன என்ற உறுதிப்பாட்டை அளிப்பது நல்ஞானம். எனவே தான் அது முழுமையான ஞானம் எனப்படுகிறது.

அருங்கலச் செப்பு நல்ஞானத்தின் சிறப்பினைக் கூறும்போது,

**"பொருள்நின்ற பெற்றியைப் பொய்யின்று உணர்தல்**
**மருளறு நன்ஞான மாண்பு"**

உலகத்தில் உள்ள உயிர் முதலான பொருள்களின் இயல்பை உள்ளவாறு உணர்தல் நல்லறிவிற்குச் (நல்ஞானத்திற்கு) சிறப்பாகும். நல்ஞானம் என்பது எதையும் சரியானபடி அறிந்து கொள்ள, தெரிந்து கொள்ள, புரிந்து கொள்ள உதவும், மிகையாகவோ, குறையாகவோ, தவறாகவோ எதையும் உள்ளது உள்ளபடி சரியாகக் காட்டும் பண்பு அதற்கு உண்டு. சந்தேகம், குழப்பம், தெளிவின்மை அதனால் நிவர்த்தியாக வேண்டும். நல்ஞானம் ஒருவனுக்குக் கைவரப் பெற்றால் அவன் எந்த ஒரு பருப்பொருளையும், கருப்பொருளையும் நன்கு புரிந்து கொள்வான். இத்தகைய தெளிந்த புரிதல் தான் நல்லொழுக்க நெறிக்கான அடிப்படையை அமைத்துத் தருகிறது.

"எந்தச் பொருள் குறைதலும் கூடுதலும் இல்லாமல் அதன் நிலையிலேயே மாறுபாடு இல்லாமல் ஐயமின்றி அறியப்படுகிறதோ அந்த அறிவை ஆகம அறிவுடைய மகாபுருஷர்கள் ஸம்யக் ஞானம்" என்று குறிப்பிடுகிறது. ரத்ன கரண்டக சிராவகாசாரம் நல்ஞானத்தை ஐந்து துறைகளில் பெற முடியும்.

| | | |
|---|---|---|
| மதிஞானம் | : | புலன் அறிவு |
| சுருதஞானம் | : | நூல் அறிவு |
| அவதி ஞானம் | : | வெகு தூரத்தில் இருப்பவற்றை அறியும் ஆற்றல் |
| மனப்பரியை ஞானம் | : | பிறர் மனத்தில் இருப்பதை அறியும் ஆற்றல் |
| கேவல ஞானம் | : | வாலறிவு - முழுதுணர் ஞானம் முதலியன ஆகும். |

சீவகசிந்தாமணியில் ஆசிரியர் நல்ஞானத்தின் இயல்பைக் குறிப்பிடும்போது பின்வருமாறு கூறுகின்றார்.

**"உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம்"** **(சீவக.முக்தி.இ.2845)**

என்று கூறுகிறார். இவ்வாறாக, நல்ஞானம் என்பது ஒரு பொருளின் உண்மைத் தன்மையை அதன் மெய்ப்பொருளை நன்கு உணர்ந்து கொள்வதே ஆகும்.

**நல்லொழுக்கம்**

**'சமயத் சாரித்திரம்'** என்பதன் தமிழாக்கக் கலைச்சொல் 'நல்லொழுக்கம்' என்பதாகும். நற்காட்சி தந்த கருத்துநிலை முடிவுகளை நல்ஞானம் செயல் நிலைக்கு ஏற்றவை என உறுதிப்படுத்த, அச்செயல் நிலையின் உயிர்நிலையாக நின்று இயங்குவது நல்லொழுக்கமாகும். எனவே, நற்காட்சி தோற்றநிலையாகவும், நல்ஞானம் வளர்நிலையாகவும், நல்லொழுக்கம் முழுமை நிலையாகவும் அமைகின்றன. மனம், வாக்கு, காயம் இந்த மூன்றையும் அதனதன் போக்குக்கிற்கு விட்டுவிடாமல்

கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்துவது, ஒழுகுவது நல்லொழுக்கம் எனப்படும். நற்காட்சியால் பெற்ற நல்ஞானம் காட்டும் நன்னெறிகளின் வழி வாழ்வதே நல்லொழுக்கம் எனப்படுகிறது. உருவ, அருவப் பொருட்கள் பற்றிய தெளிந்த சிந்தையே நற்காட்சி, அதன் வழி பெற்ற நல்ஞானம் கட்டமைக்கும் ஒழுகலாற்று நெறிகளைப் பின்பற்றுதல் நல்லொழுக்கமாகிறது. அருங்கலச் செப்பு நல்லொழுக்கத்திற்கு விளக்கம் கூறியுள்ளது.

**"காட்சியுடையார் வினைவரும் வாயிலின்**
**மீட்சியா நல்லொழுக்கு நன்று"**

வினை வருவதற்கு ஏதுவானவராக துவேஷங்களிலிருந்து மீளுதல் நற்காட்சியிருக்கு நல்லொழுக்கம் ஆகும். ஒழுக்கங்களாகக் கூறப்படுபவைப் பற்றிச் சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கத்தேவர் கூறியுள்ளார்.

**"ஏத்தரும் திருமணி இலங்கு நீர்மைய**
**கோத்தன போற்குணம் நூற்றுக் கோடியும்**
**காத்தன காவல பதினெண்ணாயிரம்**
**பாத்தன பண்ணவர் சீலம் என்பவே"**

**(சீவக.முத்தி.இ.2818)**

வேந்தனேஸ இலங்கும் தன்மையானவாகிய புகழ்தற்கரிய அழகுமணிகளைக் கோத்தாற் போன்ற எண்பத்து நான்கு நூறாயிரமாகப் பகுக்கப்பட்டனவாகிய குணவிரதங்களும், நூற்றுக்கோடி மகாவிரதங்களும், பதினெண்ணாயிரம் சீலாச்சாரங்களும், துறவியல்களால் கடைபிடிக்கத் தக்கவையாகும்.

**"மொய்யமர் ஞாட்பினுள் முரண்கொள் மன்னவீர்**
**மெய்புகு பொன்னணி கவசம் ஒப்பன**
**மையல் ஐம்பொறி மதம் வாட்டி வைகலும்**
**செய்வினை நுணுக்குவ சீலம் என்பவே"**

**(சீவக.முத்தி.இ.2819)**

அவற்றுள் சீலங்கள் என்று கூறப்படுவன யாவையெனின் வலிமை மிக்க போரிலே பகை கொண்ட வேந்தர்களின் உடலை மறைக்கும் கவசம் போன்றனவாம். நாள்தோறும் உள் நின்று மயக்கத்தைச் செய்யும் தீவினைகளையும் மாய்ப்பனவாம்.

இவ்வாறாக திருத்தக்கத்தேவர் சமண, சமய அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றான நல்லொழுக்கத்தின் இயல்பையும், எவை நல்லொழுக்கமாகக் கூறப்படுகின்றது என்பதையும் மிகவும் அழகாக செய்யுள்களின் வாயிலாகச் சமண சமய தத்துவக் கொள்கையைக் கூறியுள்ளார்.

### நிறைவுரை

சமண சமய அடிப்படைக் கொள்கைகள் மூன்று வகைப்படும். அவை நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் ஆகும். இவை சம்யக் தரிசனம், சம்யக் ஞானம், சம்யக் சாரித்திரம் என்று அழைக்கப்படுகிறது. இவை மூன்றும் சமண சமய தத்துவங்கள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த மூன்று தத்துவங்களையும் நன்கு உணர்ந்தவர்கள். பிறவி துன்பத்தில் இருந்து விடுபடக்கூடியவர்கள். இறைவனின் திருவடியை அடையக் கூடியவர்கள். வீடுபேற்றை எய்தக் கூடியவர்கள் ஆவார்கள். இந்த மும்மணிகள் சமண சமயத்தின் இன்றியமையாததாகும்.